31st March 1964]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The Government addressed the University Grants Commission for details about the Commission's pattern of assistance for the establishment of new Universities and the quantum of aid that could be expected for the proposed University at Madurai.

(b) A final decision will be taken after the report of the Expert Committee constituted by the Government is received.

Appointment of Tamil graduates as Pandits

* 487 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the graduates who took Tamil as their Optional subject in their Degree course are appointed as Tamil Pandits in the High Schools; and

(b) whether they are treated on a par with other Graduates in regard to salary, service conditions and hours of work?

THE HON. SRI M. BHAKTAVATVALAM: (a) Yes, provided that they have secured a degree in teaching and are appointed to Grade I posts.

(b) Yes.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளியில் இத்தகைய தமிழாசிரியர்களுக்குத் தலைமை ஆசிரியர்கள் பதவி கொடுக்கப்படுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கிரேடு-1 பதவி என்றால் அது தான் தலைமை ஆசிரியர் பதவி.

புதிய உயர்நிலைப் பள்ளிகள்

* 488 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: }
திரு. எம். வி. கரிவேங்கடம்: } கனம் முதல் அமைச்சர்

தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ல் தமிழ்நாட்டில் எத்தனை புதிய உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: One hundred and ninety new High schools were permitted during 1963–64.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே நடப்பு ஆண்டில் எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் திறக்க உத்தேசம் இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: வருகிற மனுக்கள், எந்த எந்த இடங்களில் அமைக்கப்படவேண்டும் என்கிற நிலை, இவற்றை யெல்லாம் பொறுத்த விஷயம் இது.

திரு. கரு. சீமைச்சாமி: புதிதாகத் திறக்கப்படுகிற உயர்நிலைப் பள்ளிகளுக்கு விளையாட்டு மைதானங்கள் இல்லை. பள்ளிகளைத் திறக்கவேண்டும் என்ற ஆர்வத்தினாலே அவ்வாறு திறக்கப்

[31st March 1964

படுகின்றன. விளையாட்டு மைதானங்களுக்கு இடம் ஒதுக்கப்படுவதோடு, ஃபிஸிகல் ட்ரெயினிங் இன்ஸ்ட்ரக்டர்களும் நியமிக்கப்படவேண்டியது அவசியம். ஆகவே, இனிமேல் திறக்கப்பட இருக்கிற பள்ளிகளைப் பொறுத்தாவது, இவை வற்புறுத்தப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முக்கியமாக கிராமப் புறங்களில் தான் உயர்நிலைப்பள்ளிகள் திறக்கப்பட்டு வருகின்றன. அங்கே விளையாட்டு மைதானங்கள் கிடைக்கக் கஷ்டம் இருக்காது. பள்ளிகள் திறக்கப்படவேண்டும் என்று விரும்புகிறவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். கனம் சட்ட மன்ற உறுப்பினரைப் போன்றவர்களும் அக்கறை கொள்ளவேண்டும். விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் கருத்து.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, மிகவும் பின்தங்கியிருக்கும் சேலம் மாவட்டத்தில் எந்தவிதமான கண்டிஷன்களும் இல்லாமல் அதிகமான உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்படுமா ? அதற்கேற்றவாறு அங்கிருக்கும் கண்டிஷன்கள் தளர்த்தப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாவட்டக் கழகம் பணியாற்றிக் கொண்டு வந்தபோதே அதிகமான உயர்நிலைப்பள்ளிகள் சேலம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டன. இப்போதும் அமைக்கப்பட்டு வருகின்றன. எவ்விதக் கண்டிஷனும் இல்லாமல் அமைக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல. மக்கள் விழிப்புடன் முன் வருகிறார்கள். அதை மேலும் திரட்டுவது கனம் உறுப்பினருடைய பொறுப்பாக இருக்கவேண்டும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, ஹோசூர் மத்தகிரியில் பொது மக்களில் ஐயாயிரம் ரூபாய் கட்டக்கூடிய வசதி படைத்தவர்கள் யாரும் இல்லை. அங்கே வேலை செய்யக்கூடியவர்கள் பெரும்பாலும் என்.ஜி.ஓ.-க்கள்தான். ஆகவே, அரசினரே ஒரு உயர்நிலைப் பள்ளியை அங்கே திறக்க முன்வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மிகவும் பிற்போக்கான பிராந்தியமாக இருந்தால், அங்கே அரசினரே முன்வந்து உயர்நிலைப்பள்ளியை அமைத்துக் கொண்டுதான் வருகிறார்கள். கனம் உறுப்பினர் குறிப்பிடுகிற இடத்தைப் பொறுத்தமட்டில், அரசாங்கம் பரிசீலனை செய்து, அவசியமா என்பதை ஆராய்ந்து அதற்குப் பிறகு முடிவு செய்யும்.

திரு. மு. கருணாநிதி : ஒரு உயர்நிலைப் பள்ளியைத் துவக்க இத்தனை மாணவர்கள் எண்ணிக்கை இருக்கவேண்டுமென்று கணக்கு இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறைந்தபட்சம் மாணவர்கள் எண்ணிக்கை இவ்வளவு இருக்க வேண்டுமென்று இருக்கிறது. எவ்வளவு என்ற விவரம் இல்லை.

31st March 1964]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஒரு இடத்தில் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னால் யார் உயர்நிலைப் பள்ளிவேண்டுமென்று கேட்கிறார்களோ அவர்களே நிலத்தை வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். வசதி இல்லாத இடங்களில் அதாவது, பஞ்சாயத்துக்களில் நிலம் வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே பள்ளிவேண்டுமென்கின்றவர்களே நிலத்தை வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்காமல் இருப்பார்களா? அதற்குப் பதிலாக சர்க்காரே மேற்படி இடத்திற்கு வேண்டிய நிலத்தை வாங்கிக் கொடுக்க முன் வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமென்றால் அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்கிறது. ஆனால் 10,000 ரூபாய் டெபாசிட் கட்டவேண்டும். முதல் ஆண்டு 5,000 இரண்டாவது ஆண்டு 3,000 மூன்றாவது ஆண்டு 2,000 என்று கட்டவேண்டும். பள்ளிக் கட்டிடம் கட்ட மக்கள் முன் வர வேண்டும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய பஸ் மார்க்கங்கள்

* 489 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்ட அபிவிருத்தி மன்றம் 1962-63-ல் புதிய பஸ் ரூட்டுகளில் பஸ் விடும்படி தீர்மானம் செய்து சர்க்காருக்கு அனுப்பியுள்ளதா ?

(இ) அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. பி. முருகையன் : சபையின் முன் வைக்கப்பட்ட அறிக்கையில் நாகப்பட்டினம், புதுக்கோட்டை வழியாக இராமநாதபுரத்திற்கு ஒரு பஸ் விடப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த பஸ் எப்போது முதல் விடப்படும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

சின்னசாமியின் தற்கொலை

* 490 **கேள்வி.—திரு. வி. எஸ். எஸ். மணி :**
திரு. எஸ். ஆறுமுகம் :
திரு. செ. மாதவன் :
திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : } கனம் முதல்

---

a 860–863-ம் பக்கங்களில் ஐந்தாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.